பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 102

சனிக்கிழமை
08 மார்ச் 2025

மாசி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

அத்துமீறிய மீன்பிடி

## 14 பேர் கைது!

மன்னார், மார்ச் 8
அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 14 பேர் இலங்கைக் கடற்படையால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும், தாழ்வுபாடு கடற்படை முகாமில் வைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத்தொடர்ந்து மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரி 11

## புலிகளால் அடித்து விரட்டப்பட்டவர்தான் உயிர்த்ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரி!

இராணுவ உளவாளியாகவும் செயற்பட்டவராம் ஞானசாரதேரர் நேற்றுப் பரபரப்பு நேர்காணல்



கொழும்பு, மார்ச் 8
புலிகள் அமைப்பால் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஒருவரே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத் 11

பாடசாலைகளில்

## பணம் அறவிட்டால் உடன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 8
பாடசாலைகளில் பணம் அறவிடுவது குறித்து கல்வி அமைச்சுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டால், அதுபற்றி உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி 11

# வடக்கை அபிவிருத்தி செய்ய அரசு துரித நடவடிக்கை!

அமைச்சர்கள் குழு நேற்று நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடமாகாணத்தில் விரைவில் பரந்துபட்ட அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும். அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் சுனில் ஹெந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். 11



## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

3 மணிநேரம் தாமதமாகவே வருகைதந்தனர் பொலிஸார்

வவுனியா, மார்ச் 8
வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11

## போதைமாத்திரைகளுடன் இளைஞர் நேற்றுக் கைது!

வவுனியா, மார்ச் 8
வவுனியா தேக்கந்தோட்டம் பகுதியில் ஆயிரம் போதைமாத்திரைகள் மற்றும் 2 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா குற்றத்தடுப்பு பிரிவினருக்கு 10



தேசியப் பாதுகாப்பு

## பூச்சியம்

கொழும்பு, மார்ச் 8
நாட்டின் தேசியப் பாதுகாப்பு பூச்சிய நிலைக்கு வந்துள்ளது. எனவே, நாட்டில் ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் 11

செம்மணிப் புதைகுழியில்

## மேலாய்வுப் பணிகளுக்காக ரூ.19.8 மில்லியன் தேவை!

யாழ்ப்பாணம், மார்ச் 8
செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக மேலாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக 19.8 மில்லியன் ரூபா தேவை என்று கோரிக்கை விடுக்கப்பட் 11

## மாவீரர் துயிலுமில்லங்களை உடனடியாக விடுவியுங்கள்!

ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 8
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் பிடியிலுள்ள துயிலுமில்லங்கள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இறந்தவர்களை நினைவுகூரும் அனுட்டானங்கள் அந்தந்த மதங்களின் நம்பிக்கைக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் கடந்த மாவீரர் தினத்தை எமது மக்கள் மிகவும் உணர்வுபூர்வமாக நினைவுகூர்ந்தனர். எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் படுகொலைகளையும் 11

## குடும்பப்பெண் துஷ்பிரயோகம்; தலைமறைவானவர் கைதானார்

வவுனியா, மார்ச் 8
வவுனியாவில் இளம் குடும்பப் பெண்ணை மிரட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில், 37 வயதுடைய குடும்பத் தலைவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா பம்பை 11




'எத்தின பேரக் கைதுசெய்தாலும் புத்தி வருகுதில்ல கண்டியளே...!'

## பொன் அணிகளின் போரில் சென். பற்றிக்ஸ் ஆதிக்கம்!

யாழ்ப்பாணம், மார்ச் 8
பொன் அணிகளின் போர் கிரிக்கெட் ஆட்டத்தின், இரண்டாவது நாள் முடிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முன்னிலையில் உள்ளது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 'பொன் அணிகளின் போர்' கிரிக்கெட் ஆட்டம், யாழ்ப்பாணம் சென். 11

## வடக்கின் பெரும்போரில் சென்.ஜோன்ஸ் முன்னிலை!

யாழ்ப்பாணம், மார்ச் 8
வடக்கின் பெரும்போர் கிரிக்கெட் ஆட்டத்தில், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி முன்னிலையில் உள்ளது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுந்தினம் இந்த ஆட்டம் ஆரம்பித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 07.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4010 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 22 23 41 65 |
| விசே. எழுத்து | B |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 07.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1077 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 23 47 58 59 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 07.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 036 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 3 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 07.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2116 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 24 42 62 75 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 07.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5768 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 7 8 5 5 8 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 07.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1798 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 11 31 51 68 |
| விசேட எழுத்து | X |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 07.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 343 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 5 5 8 0 |

# பதின்ம வயதுக் கர்ப்பம் கடந்தாண்டில் அதிகரிப்பு

## தாக்கம் செலுத்தும் சமூக வலைத்தளப் பாவனை



**கொழும்பு, மார்ச் 8**

**2023ஆம் ஆண்டு 163 பாடசாலை மாணவிகள் கர்ப்பம் அடைந்திருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கையானது 213 வரை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் மீதான அத்துமீறல் விசாரணைப் பிரிவின் தரவுகள் இதனைத் தெரிவித்துள்ளன.

சமூக வலைத்தளப் பாவனை அதிகரிப்பின் பின்னர் இலங்கையில் சிறுவயதுக் கர்ப்பங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

2024ஆம் ஆண்டு பதிவான குழந்தைத் தாய்மார்களில் 10 வயதான சிறுமி ஒருவரும் உள்ளடங்கியுள்ளார்.

அதேவேளை நாட்டில் தற்போது பதிவாகின்ற சில சம்பவங்களில், கர்ப்பத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆண்கள், 18 வயதுக்கு குறைவான சிறுவர்கள் எனவும் அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுவர் அத்துமீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு வெளியிட்டுள்ள புள்ளிவிபரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிறுவர் அத்துமீறல் அதிகம் இடம்பெற்ற பிரதேசங்களாக வாகரை, மண்முனை வடக்கு மற்றும் கிரான் போன்ற பிரதேசங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 07.03.2025 | வெள்ளிக்கிழமை | 0476 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| H | 3 9 5 2 7 7 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.03.2025 | வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2742 | J | 06 19 46 54 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.03.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| V | 28 54 63 66 | 4903 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 07.03.2025 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0637 | 28 34 35 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.03.2025 | வெள்ளிக்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 06 25 47 53 | 4454 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 07.03.2025 | வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 24 | 02 06 09 20 | 1918 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 07.03.2025 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 09 26 57 59 | 2568 |

# அல்ஜெஸீராவின் நேர்காணலில் புலிகளின் ஆதரவாளர்களாம்!

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 8

சர்வதேச ஊடகமான அல்ஜெஸீரா தொலைக் காட்சியில் ஒளிபரப்பான தனது நேர்காணல் திருத்தப்பட்டுள்ளது என்று அதிருப்தி வெளியிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

சர்வதேச ஊடகமான அல்ஜெஸீரா தொலைக்காட்சி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேர்கண்டிருந்தது. ஊடகவியலார் மெஹ்தி ஹசனால் நெறிப்படுத்தப்பட்ட இந்த நேர்காணலில் பல சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. இந்த நேர்காணலில் ரணில் விக்கிரமசிங்க ஆறு தடவைகள் சீற்றமடைந்து இடைநடுவே வெளியேற முற்பட்டார் என்று அல்ஜெஸீரா தொலைக்காட்சி தெரிவித்திருந்தது.

இந்தநிலையில், இந்த நேர்காணல் ஒளிபரப்பான சிறிது நேரத்திலேயே ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரம்சிங்க நேர்காணல் தொடர்பாக அதிருப்தி வெளியிட்டுள்ளார். ஊடகவியலார் மெஹ்தி ஹசனுடன் இணைந்திருந்த மூன்று உறுப்பினர்களில் இருவர் புலிகளின் ஆதரவாளர்கள் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மனித உரிமைகள் சட்டத்தரணியும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான அம்பிகா சற்குணநாதன் இந்த விவாதத்தில் பங்கேற்பார் என்று எனக்கு முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எமக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், நான் அவரை அறிந்திருப்பதால் நான் மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் பின்னர் அவருக்குப் பதிலாக விடுதலைப் புலிகள் ஆதரவுக் குழுக்களுடன் தொடர்புடைய இரு குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதை அறிந்து கொண்டேன்.

நேர்காணலில் எனது பதில்களின் முக்கியமான பகுதிகள் தவிர்க்கப்பட்டுள்ளன. அல்ஜெஸீரா என்னை இரண்டு மணிநேரம் நேர்காணல் செய்தது. ஆனால் ஒரு மணிநேரப் பகுதியை மட்டுமே வெளியிட்டுள்ளது. அதிலும் பெரும்பகுதியைத் திருத்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ச-இ)

# சஞ்சீவ கொலை; சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 8

கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்குத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 9 சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 21ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் 'ஸ்கைப்' தொழில்நுட்பம் மூலம் கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலியிடம் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-இ)

# பெண்களையும் வாட்டும் போதைப்பொருள் பாவனை

கொழும்பு, மார்ச் 8

நாட்டில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் பெண்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

மகளிர் தினத்தை முன்னிட்டு 25 மாவட்டங்களிலும் உள்ள 15 வயதுக்குக்கு மேற்பட்ட 1000 பெண்களை உள்ளடக்கி மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் நடத்திய ஆய்வொன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

நாட்டில் 43 சதவீதப் பெண்கள் உளரீதியான சவால்களை எதிர்கொள்கிறார்கள். . அத்துடன், பெண்கள் தவிர்ந்த ஏனைய தரப்பினரின் மதுபானப் பாவனையினாலும் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக, 27.4 வீதமான பெண்கள் அயலவர்களினாலும், 27 சதவீதமான பெண்கள் இனந்தெரியாதோர்களினாலும் 20 வீதமான பெண்கள் உறவினர்களாலும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

34 சதவீதமான பெண்களுக்கு இது குறித்த விழிப்புணர்வு இல்லை எனவும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் சிகிச்சைபெற்ற

# புற்றுநோயாளர்கள் யாழில் சிகிச்சையைத் தொடர ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 8

**வடக்கை வதிவிடமாகக் கொண்ட புற்றுநோயாளர்கள் கொழும்பில் மருத்துவநடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் நோயாளர்கள் தமது சிகிச்சையை யாழில் தொடர விரும்புமிடத்து தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வடக்கிலுள்ள புற்றுநோயாளர்கள் கொழும்பில் சிகிச்சை பெற்று வருகையில் தமது நலிவுத் தன்மை காரணமாக அல்லது பிரயாணக் கஸ்டம் மற்றும் பணவசதிக் குறைவு காரணமாக தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சையைத் தொடர்வதற்காக தமது விருப்பில் செல்லுகையில் அங்கு சிகிச்சை மறுக்கப்பட்டமை தொடர்பில் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

குறித்த விடயம் தொடர்பில் புற்றுநோயாளர்கள், மனித உரிமை ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சு ஊடாக முறைப்பாடுகளைக் கொடுத்தும் கடந்த ஒரு வருடமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் கலந்துரையாடப்பட்டது. இதிலேயே புற்றுநோயாளர்களின் நலன்கள் பூரணமாகப் பேணப்படும் முறையிலான முடிவுகள் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுமுள்ளது.

அதற்கமைய நோயாளர்கள் தாம் பெற்ற சிகிச்சை தொடர்பான சகல விவரங்களையும் கடிதத்துடன் எடுத்துச் செல்லுமிடத்து தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்படும் எனவும் அவர்கள் எவ்வித காரணத்துக்காகவும் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் எனவும் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. (ச-27)

## கட்டாக்காலி நாய்களால் பயிர்ச்செய்கை பாதிப்பு

### விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 8

கட்டாக்காலி நாய்களாலும் விவசாய நிலங்கள் பாதிப்படைவதாகவும் உள்ளூராட்சி மன்றங்களின் போதிய அக்கறையின்மையே இதற்குக் காரணம் எனவும் யாழ்.மாவட்ட விவசாயக்குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கரவெட்டி சுன்னாகம் ஆகிய பகுதிகளில் வெங்காயப் பயிர்செய்கையை முன்னெடுத்துள்ள 10 விவசாயிகள் இந்தப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கைவிடுத்தனர். (ச-125)

வெங்காயச் செய்கையில்

## காலபோக அழிவுக்கே இலவசக் காப்புறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 8

வெங்காயச் செய்கையை முன்னெடுக்கும் விவசாயிகளுக்கு குறித்த போகங்களில் ஏற்படுகின்ற அழிவுகளுக்கு மாத்திரமே இலவசக்காப்பறுதி வழங்கப்படும் எனக் காப்புறுதிக்கு பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட விவசாயக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது தமது வெங்காயப் பயிர்செய்கைக்கான அழிவுகளைப் பெறுவதில் தாமதம் நிலவுவதாக விவசாயிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த கமநல கமத்தொழில் காப்புறுதி சபை அதிகாரி, சிறு மாரி மற்றும் மாரி காலங்களில் வெங்காயச் செய்கைகளை மேற்கொள்ளவேண்டாம் என அறிவுறுத்தியுள்ளோம். எனவே விவசாயிகளுக்கு குறித்த காலபோகத்தில் ஏற்படும் அழிவுகளுக்கு மாத்திரமே காப்புறுதி இலவசமாக வழங்க முடியும் என்றார். (ச-125)

## கழிப்பறைக் குழியில் வீழ்ந்து குழந்தை சாவு

கொழும்பு, மார்ச் 8

ஆரச்சிகட்டுவ, வைரங்கட்டுவப் பகுதியில் கட்டுமானப் பணி நடைபெற்றுவரும் பாதுகாப்பற்ற கழிப்பறைக் குழியில்விழுந்து ஒருமாதக் குழந்தை உயிரிழந்துள்ளதாக ஆரச்சிகட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வினுகி ஹன்சிமா என்ற பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது. (ச-இ)





## பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் இவ்வாண்டுக்குள் புனரமைப்பு

நாடளாவிய ரீதியில் 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாண்டுக்குள் அவை அனைத்தையும் பாதுகாப்பானதாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் சபை முதல்வரும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத்திட்டக் குழுநிலை விவாதத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளைப் பாதுகாப்பானதாக மாற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே , இலங்கையில் பாதுகாப்பற்றதாகக் கருதப்படும் அனைத்து ரயில் கடவைகளையும், சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக பாதுகாப்பானதாக மாற்றுவோம் - என்றார். (ச-இ)




காப்பெற் றோட்டில நெல்லைக் காயப் போடுறதைப் பற்றி பட்சி நேற்றுச் சொல்லியிருந்ததெல்லோ. அதை வாசிச்சுப் போட்டு விடியப்பிறமே கனக்கக் கோல் வரத் தொடங்கிட்டுது. பட்சி சொன்ன சில விசயங்களில அவையள் உடன்பட்டாலும், சில விசயங்களில அவைக்கு உடன் பாடில்லை. அதிலையும் நெல்லைக் காயப்போடுற மேடைக்குத் தட்டுப்பாடு இல்லை எண்டு அவை சொல்லுகினம். வடக்கில எல்லா மாவட்டத்திலையும் இப்பிடி நெல்லைக் காயவைக்கிறதுக் கெண்டே கனக்க மேடை யள் இருக்கு. ஆனால் அங்க நெல்லைக் கொண்டந்து காயப்போடுற ஆக்கள் குறை வாம். அதால அந்த மேடையள் நெல்லில்லாமல் அப்பிடியே மல்லாந்து வானத்தைப் பார்த்துக்கொண்டு கிடக்குதுகளாம்.

இப்பிடி மேடையள் இருந்தும் ஏன் றோட்டில தான் காயப்போடுவம் எண்டு சனங்கள் ஒற்றைக்காலில நிக்கினம்? அதுக்கும் ஒரு காரணம் இருக்காம். நெல்லைக் காயப்போடுற மேடையளை அரசாங்கம், வயல் இருக்கிற இடத்தில இருந்து கனதூரத்தில இருக்கிற இடங்களிலதான் கட்டிவைச்சிருக்காம். அதால வெட்டின நெல்லை அங்க ஏத்திக் கொண்டுபோய், ரண்டுமூண்டு வெயிலில அதை மேடையில பரவி, அள்ளிக் கட்டுறதுக்கு கனக்க காசு முடியுதாம். அதாலதான் செலவைக் குறைக்கிறதுக்காக இப்பிடி பக்கத்தில இருக்கிற காப்பெற்றில போட்டு காயவைக்கினமாம். அதைவிட இன்னொரு தகவலும் சொல்லிச்சினம். விவசாயத்திணைக்களம் ஒவ்வொரு வருசமும் மானிய விலையில, தறப்பாள் குடுக்கிறதாம். அந்தத் தறப்பாளில நெல்லை வீட்டு வளவுக்குள்ளேயே காயப் போடலாம். ஆனால், கனபேர் அந்தத் தறப்பாளை வாங்கினாலும், அதில நெல்லைக் காயப்போடாமல் காப்பெற்றே கதி எண்டு, அங்கதான் போடுகினம். இன்னும் சிலபேர் காசு செலவழிஞ்சிடுமெண்டு தறப்பாளே வாங்கிறேலையாம்.

இப்பிடிக் காப்பெற்றில நெல்லைக் காயப் போடுற விசயத்தில அடிபாடுகூட வருமாம். முதல்நாள் ஒராள் நெல்லைக் காயப்போட்ட இடத்தில விடிய வெள்ளனவே வேற ஒராள் வந்து தன்ர நெல்லைப் பரவிப் போடுமாம். அதுக்குப் பிறகு முதல்நாள் நெல்லைக் காயப்போட்டவர் அந்த இடத்துக்கு வந்து பார்த்தால், புதுசா வந்தவர் நெல்லைப் பரப்பிக் கொண்டு இருப்பாராம். அதுக்குப் பிறகு 'இது என்ர இடம்' எண்டு ரண்டுபகுதியும் மாறி மாறி சண்டையில இறங்கிடுவினமாம். தனிநாடு கேட்டுப் போராடின இனம், இப்ப காப்பெற் றோட்டில நெல்லுக் காயவிடுறதுக்கு அடிபடுகிறதை நினைச்சால், அழுகிறதா சிரிக்கிறதா எண்டு தெரியாமல் கிடக்கு கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 02 . 1950



மறைவு
04 . 03 . 2025

## அம்பிகைபாகு சண்முகராசா

**(ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்தியசாலை உத்தியோகத்தர், கைதடி)**

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், நுணாவில் சந்தி, வீரக்கொடியர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகைபாகு சண்முகராசா கடந்த 04.03.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகைபாகு மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மேஸ்வரி (திலகம்) அவர்களின் அன்புக் கணவரும், சிவஞானம் (கனடா), புஸ்பராசா (லண்டன்), சிவசண்முகராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெசிதா (சுவிற்சர்லாந்து), சுகிர்தா (கனடா), பிரதீபன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயானந்தன், குணராசா, சாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆஷா, மகிஷா, ரனிஷ்கா, ரஷ்வின், சஜிதன், திவ்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப 10.00 மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**தகவல் : குடும்பத்தினர்**
077 820 2443
தீபன் - 074 352 6730

வீரக்கொடியார் வீதி,
நுணாவில் சந்தி.

(CR/44492) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 01 . 1951



மறைவு
07 . 03 . 2025

## சிவக்கொழுந்து சீதேவிப்பிள்ளை

விடத்தற்பளை, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சீதேவிப்பிள்ளை அவர்கள் நேற்று (07.03.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி-சின்னம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-வள்ளியம்மை தம்பதியின் பாசமிகு மருமகளும் சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மனைவியும் சிவசோதி (வானொலி அறிவிப்பாளர்-கனடா), சிவசொரூபன் (மாவட்ட இணைப்பாளர், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம்-கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயக்குமார் (விற்பனை முகவர்.Remax-கனடா), கஜந்தினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-பச்சிலைப்பள்ளி பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் (காலஞ்சென்ற) ஆறுமுகம், செல்லாச்சிப்பிள்ளை, (காலஞ்சென்ற) செல்லையா, கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவமலர், செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெசோ, ஜெனுஸ், கபிஷன், மிதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் விடத்தற்பளை, மிருசுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விடத்தற்பளை சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 617 2083**

விடத்தற்பளை,
மிருசுவில்.

# மரண அறிவித்தல்



## பார்வதி சுப்பிரமணியம்

கரவெட்டி புதுத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கண்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பார்வதி சுப்பிரமணியம் கடந்த 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் கரவெட்டி புதுத்தோட்டத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தப்பு வாத்தியார்- இலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - முத்தாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், சாவகச்சேரி, தபால் கந்தோர் வீதியை சேர்ந்த Dr. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், வித்தியானந்தன் (USA), அருள்நிதி (Australia), தயாநிதி (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான வீரவாகு, விக்கினேஸ்வரன், பாலசுப்பிரமணியம், கணேசன், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தி (USA), பராபரன் (Australia), செல்வகுமரன் (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரகுபரன், அக்ஷாரா, அருணன், அபிநயா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2025) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் கண்டி வீதி, சாவகச்சேரி அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்** 05.01.1937 **மறைவு** 02.03.2025

கண்டி வீதி,
சாவகச்சேரி,
(வாகன புகை பரிசோதனை நிலையத்திற்கு முன்பாக)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

மனப்பூர்வமான முயற்சிகள் மகத்தான வெற்றிகளைத் தராமல் விட்டதாகச் சரித்திரமே கிடையாது.

– ஜான்வானா மேக்கர்–


# சீனம் - நவ்ரு -இலங்கை!

உலகில் முதல்முறையாக ஒரு நாடொன்று தனது குடியுரிமை விற்பனைக்கு உள்ளதாகவும், விரும்புவோர் அதை வாங்கிக்கொள்ளலாம் என்றும் அறிவித்திருக்கின்றது. பசுபிக் பிராந்தியத்தில் உள்ள உலகில் ஆகச்சிறிய தீவு நாடுகளில் ஒன்றான நவ்ரு தீவே இந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றது. இதன்படி, ஒரு லட்சத்துக்கு 5 ஆயிரம் டொலர் இருந்தால் (இலங்கை ரூபாவில் அண்ணளவாக மூன்று கோடி) இன்று எவரொருவரும் நவ்ருவின் குடிமக்களாக மாறமுடியும். தனது குடியுரிமையை விற்றுத்தான் நவ்ரு வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கும், இலங்கைக்குமான தொடர்பும் - பின்னணியும், கிட்டத்தட்ட ஒரே வகையானது மட்டுமல்ல பாரதூரமானதும்கூட.

வெறும் 8 சதுரகிலோமீற்றர் பரப்பளவையும், 12 ஆயிரத்து 500 பேர் அளவிலான சனத்தொகையையும் கொண்ட மிகமிகச் சிறிய தீவுநாடாக இருந்தா லும், அமைவிடம் காரணமாக நவ்ரு தீவு உலகின் கேந்திரங்களில் ஒன்றாகவே விளங்கியது. அணி சேராக் கொள்கையைப் பின்பற்றி, அன்றாடம் காய்ச்சியாக இருந்த நவ்ரு, 2023ஆம் ஆண்டில் தன் நிலைப்பாட்டை மாற்றி 'சீனாவின் பிரிக்கப் படாத பகுதியே தாய்வான்' என்ற அதிகப்பிர சங்கித்தனமான அறிவிப்பை விடுத்தது. அடுத்த வாரமே, நவ்ரு தீவின் அதிபர் சீனாவுக்கு அழைக் கப்பட்டு ஒருதொகை நிதியுதவியும், சில உதவித் திட்டங்களும் வழங்கப்பட்டன. அன்றுமுதல் உலகிலிருந்து நவ்ரு மெல்ல தனிமைப் படுத்தப்பட்ட பின்னர், ஒரு கட்டத்தில் நவ்ருவை முற்றாகக் கைவிட்டது சீனம்.

சீனச் செங்கொடியின் 'அலுவல்கள்' முடிவடைந்த பின்னர், இன்று நவ்ரு 'எப்போதாவது தேடப்படும் ஒன்றாக' சீனாவுக்கு மாறியுள்ளது. நவ்ருவில் முதலிடுவதற்கு எந்த நிறுவனங்களும் முன்வரவில்லை. குறைந்தபட்சம் நவ்ருவின் சுற்றுலாத்துறையைக்கூட எந்தப் பெருநிறுவனங்களும் நாடவில்லை தேடவில்லை. இதன் விளைவாகவே, இன்று பொருளாதார மூலங்கள் இல்லாமல் - வாழவழியில்லாமல் தனது குடியுரிமையை விற்றுத்தான் வாழவேண்டிய நிலைக்கு நவ்ரு தள்ளப்பட்டுள்ளது. நவ்ருவின் கடந்தகாலம்தான், இலங்கையின் நிகழ்காலம்.

'பிரிக்கப்படாத சீனாவின் ஒருபகுதியே தாய்வான்' என்ற அறிவிப்புமுதல், பொருளாதார ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் சீனாவைச் சார்ந்தே இலங்கை இப்போது சென்றுகொண்டிருக்கின்றது. 21ஆம் நூற்றாண்டுக்கான 'வர்த்தக உலகில்' எந்தவொரு நாட்டையும் முற்றாகச் சார்ந்திருப்பதோ அல்லது விசுவாசம் காட்டுவதோ தகாது. அதன் விளைவு எவ்வளவு பாரதூரமானது என்பதைத்தான் நவ்ரு தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வாறான நிலைமை இலங்கைக்கு நேராமல் இருக்க வேண்டுமாயின், இலங்கை கொஞ்சம் ராஜதந்திரம் பழகவேண்டும். விடயம் என்னவென்றால், நவ்ருவின் குடியுரிமையை வாங்குவதற்காவது ஆட்கள் உள்ளனர் . ஆனால் இலங்கையில்.. (?)




# பஸ், ரயில் சாரதிகளாக விரைவில் பெண்கள்!


**கொழும்பு, மார்ச் 8**
**இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் ரயில் சேவைக்கும் பெண்களைப் பணியமர்த்துவதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, இலங்கை போக்குவரத்துச் சபைக்கும், ரயில் சேவைக்கும் பெண்களை பணியமர்த்துவதற்கு எமது அமைச்சரவை அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

பேருந்து ஓட்டுநர்களாக, ரயில் சாரதிகளாக, பாதுகாவலர்களாக பெண்களை இன்னும் சில நாள்களில் பார்க்கமுடியும். நாளைய மகளிர் தினத்துக்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# சிவகங்கை வழமைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 8
காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சிவகங்கை கப்பலின் சேவை வழமைக்குத் திரும்பியுள்ளதாக அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.
செவ்வாய்க்கிழமை தவிர்ந்த அனைத்து நாள்களும் இந்தக் கப்பல் சேவை இடம்பெறும். எனவே பயணிகள் www.Sailsubham.com என்ற இணையத் தளத்துக்குள் பிரவேசிப்பதன் மூலமாகவோ அல்லது 0212224647, 0117 642117 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ ஆசனப்பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனக் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-27)




# லஞ்சம் பெற்ற பொலிஸார் கைது

வெளிநாட்டு சிகரெட்டுக ளுக்காக ஆஸ்திரியா நாட்டுப் பெண்ணிடம் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
வெளிநாட்டு சிகரெட்டுகள் தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக குறித்த ஆஸ்திரியா சுற்றுலாப் பயணியிடம் 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் கோரியுள்ளனர். கைதானவர்களில் ஒரு சார்ஜென்ட் மற்றும் 2 கான்ஸ்டபிள்கள் உள்ளடங்குவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# பொலிஸார் இடமாற்றம்!

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் சிலருக்கு இடமாற்றம் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. உடன் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த இடமாற்றம் மற்றும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இடமாற்றங்களுடன் சிலருக்கு தற்போதைய பதவிகளுடன் மேலதிக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# விவசாயத்துறைக்கு கனடா ஒத்துழைப்பு

கொழும்பு, மார்ச் 8
இலங்கையின் விவசாயத்துறையின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்க கனடா விருப்பம் தெரிவித்துள்ளது.
கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் மற்றும் விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.
காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் விவசாயத்துறையில் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டன.
வடக்கு, கிழக்கு விவசாய அபிவிருத்திக்கு சிறப்பான பங்களிப்பு வழங்கப்படும் எனவும் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் கூறினார். (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - மாசி - 25
09.03.2025
சுபநேரம் : 09.34 - 10.54
ராகுகாலம் : 04.54 - 06.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** இன்று அனைத்து விஷயங்களிலும் பொறுமையாக இருப்பது அவசியம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மிதுனம்:** எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும். தாய்மாமன் வழியில் சுபச்செய்தி வரும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியுடன் செலவும் ஏற்படும்.

**விருச்சிகம்:** உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பயணத்தின்போது கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்பு கரைவதுடன் கடனும் வாங்க நேரிடும். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

# கச்சதீவுக்குச் செல்வோர் இம்முறை விண்ணப்பம் நிரப்புவது கட்டாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 8

கச்சதீவுத் திருவிழாவுக்குச் செல்பவர்கள் விண்ணப் பப் படிவங்களைப் பூர்த்தி செய்து வழங்குவது கட்டா யம் என்று யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

கச்சதீவுத் திருவிழா தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட் டச் செயலகத்தில் நடைபெற்ற முன்னாயத்தக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து தலா 4 ஆயிரம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டுள்ளது. உத்தியோகத்தர்கள், ஏனைய ஆளணி யினர் என மொத்தமாக இம்முறை 9 ஆயிரம் பேர் கச்சதீவில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டுள் ளது.

எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து வழங்கிய பின்னரே இம்முறை கச்ச தீவுக்குள் நுழையமுடியும். குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்குப் போக்குவரத்துக் கட்டணமாக ஆயிரத்து 300 ரூபாவும், நெடுந்தீவில் இருந்து ஆயிரம் ரூபாவும் அறவிடப்படவுள்ளது. சேவையில் ஈடுபடும் படகுகள் அனைத்தும் சோதனைக்குட்படுத் தப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் கடற் படை ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கச்சதீவுத் திருவிழா முன்னேற்பாட்டு நடவடிக்கைக் காக நாளைமறுதினம் 10ஆம் திகதி கடற்படையினர் உத்தியோகத்தர்களை அழைத்துச் செல்லவுள்ள னர். அதேவேளை, எதிர்வரும் 14ஆம் திகதி முதல் கடற்படையினரின் 90 பயணிகளை ஏற்றத்தக்க குளிரூட்டப்பட்ட விசேட படகு சேவையில் ஈடுபடுகின் றது. அந்தப் படகில் நீதிபதிகள், தூதரக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், முக்கியஸ்தர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அதேவேளை, நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான ஒரு வழிப் போக்குவரத்துக் கட்டணமாக 1000 ரூபா வும், குறிகாட்டுவானிலிருந்து ஒரு வழி போக்குவ ரத்து கட்டடணமாக 1300 ரூபாவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. (எ-125)

## கச்சதீவு ஆலயத் திருவிழாவில் சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

யாழ்ப்பாணம், மார்ச் 8

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் தமிழகத்தின் சிவகங்கை மறைமாவட்ட ஆயர் பேரருட் தந்தை லூர்து ஆண் டகை கலந்துகொள்ளவுள்ளார். இந்தியாவில் இருந்து ஆயர் ஒருவர் கலந்துகொள்வது இதுவே முதல்முறை என்று யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித் துள்ளார். கச்சதீவுத் திருவிழா தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட் டச் செயலகத்தில் நடைபெற்ற முன்னாயத்தக் கலந்துரையாட லின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சிவகங்கை மறைமாவட்ட ஆயர் யாழ்ப்பாணம் வந்து எம்முடன் இணைந்து கச்சதீவு வரவுள்ளார். அவருடன் இந்தியாவிலிருந்து வரும் நூற்றுக்கணக்கான குருக்கள் திருவிழாவில் பங்குபற்ற வுள்ளனர்-என்றார். (எ-125)

## பொறியியற் கண்காட்சி !

கொழும்பு, மார்ச் 8

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற் பீடத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டா டும் பவள விழாவின் ஓர் அங்க மாக பொறியியற் கண்காட்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 26 வரை பொறியியற் பீடத்தில் நடைபெற வுள்ளது.

இந்த வருடம் கல்விச் சுற்றுலா செல்லவிருக்கும் பாடசாலைகள் உங்கள் சுற்றுலாவை கண்டியை நோக்கி மாற்றிக்கொண்டு தவறா மல் இந்தக் கண்காட்சியில் பங்கு பற்றும் வாய்ப்பை பெற்றுக் கொள்ளுமாறு பொறியியற் பீடம் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். கே.நவரட்ணராஜா அறிவித்துள் ளார். (ச-22, 159)



## ஆசிரிய கலாசாலையில் நடைப்பயிற்சிக்கழகம்

யாழ்ப்பாணம், மார்ச்.8

கோப்பாய் ஆசிரியர் கலாசா லையில் விரிவுரையாளர்களி டையே உடல் ஆரோக்கியத்தைப் பேணும் நோக்குடன் நடைப்ப யிற்சிக் கழகம் கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கலாசாலையின் வேலை நேரத் தின் பின்னர் [illegible] மாலை 5 மணி முதல் மாலை 6மணி வரை நடைப்பயிற்சி மற் றும் உடற்பயிற்சியை மேற் கொள்ளும் நோக்குடன் இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள் ளது. நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பா ளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, கலாசாலையின் உயிரியல் பாட முன்னாள் விரிவுரையாளர் வ.சி. குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-41-66,9)

## திறனாய்வுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்.8

யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரியின் இல்லமெய் வல்லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வு கல்லூரி அதி பர் வே.த.ஜயந்தன் தலை மையில் இன்று சனிக்கி ழமை பிற்பகல் 1.30மணிய ளவில் கல்லூரி மைதானத் தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வடமாகாண உடற் கல்வி உதவிக் கல்விப்ப ணிப்பாளர் ராஜகோபால் ராஜசீலன் பிரதம விருந்தி னராகக் கலந்துகொள்ள வுள்ளார். (ச-41-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசனக் கட்டமைப்புகளின் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நீர்ப்பாசனக் கட்டமைப்பின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியை அடுத்த 8 மாதங்களுக்குள் முழுமையாகவும் செயற்திறன்மிக்க வகையிலும் பயன்படுத்த வேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாட்டின் நீர்ப்பாசனத்துறையின் வளர்ச்சிக்கு எடுக்கவேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் நீர்ப்பாசனத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவது தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் நீண்டகாலப் பிரச்சினையான நீர்ப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்கும் நோக்கத்தில், இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் நீர்ப்பாசனத் துறைக்கு அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை திட்டங்களுக்கு செயற்றிறன்மிக்க வகையில் பயன்படுத்துவதன் ஊடாக இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சி இலங்கை எளிதாக அடையமுடியும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். திட்டங்களை மிக நுணுக்கமாக ஆய்வு செய்து, அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை செயற்திறன்மிக்கவகையில் பயன்படுத்துவது தொடர்பாக இந்தக் கூடடத்தில் கலந்துரையாடப் பட்டுள்ளது. (ஏ-இ)

**பிரத்தியேக வகுப்புக்கள்**

தரம் 08 - GCE (O/L)

மேற்படி வகுப்புகளுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் (தமிழ்/ ஆங்கிலம்) மொழி மூலம் தனிப்பட்ட ரீதியாக அல்லது குழுக்களுக்கு நேரில் வந்து கற்பிக்கப்படும்.

(CS/57684) J-1

**077 447 3343, 076 889 1321**

**வேலைவாய்ப்பு**

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

- Computer Billing + Casher (ஆண்/பெண்)
- Manager (02 Years Experience)
- Sales Assistant (உதவியாளர்)
- Accounts
- Packing (பெண்)

வயது எல்லை (18 - 35)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

(CS/57694) J-1

**077 419 5209, 077 419 5015**

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 09 . 1935

மறைவு 01 . 03 . 2025

### சிவசம்பு மனோன்மணி

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு மனோன்மணி (தையல்நாயகி) அவர்கள் கடந்த 01.03.2025 சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்வம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசம்பு ( முன்னாள் உதவி அரசாங்க அதிபர் சண்டிலிப்பாய் ) அவர்களின் அன்பு மனைவியும், உதயராணி (ஜேர்மனி), உதயகுமார் (கலிபோனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பெறாமகள்களான ரேணுகா (இலங்கை) , ராதிகா (நியூயோர்க்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (கனடா), தியாகராசா மற்றும் செல்வராசா (கனடா), கமலராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசலிங்கம், சசிகலா, ஸ்ரீதரன், ஜெயாநந்தன் ஆகியோரின் மாமியும் ஆரபி, மயூரன், ஆரணி, ஆதித்தன், திவ்வியா, வீஷ்மன், அபிநயா ஆகியோரின் பேர்த்தியும் செல்வராணி, புவனேஸ்வரி, தேவராணி, காலஞ்சென்றவர்களான திலகவதி, சரோஜினிதேவி மற்றும் விநாயகமூர்த்தி, சந்திரவதனா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் பால் பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உதயபவனம்
பத்திரகாளி கோவிலடி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
மகள் - உதயராணி - 0049 157 760 04554
மகன் - உதயகுமார் - 001 408 368 3366
075 868 0368, 077 946 5372

(CS/57657) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 02 . 1931

மறைவு 06 . 03 . 2025

### குணரத்தினம் பவளம்

அச்சுவேலி மடத்தடியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் பவளம் நேற்றுமுன்தினம் (06.03.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - கற்பகம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற குணரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சாந்தினி, குகதாஸ் (கனடா), சுபதாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தம்பையா, அருள்மொழி (கனடா), ஆரணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நவரத்தினம் (கனடா), காலஞ்சென்றவர்களான இரத்தினம், திரவியம், பாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், விஜயலட்சுமியின் மைத்துனியும், கஜனி - சுரேஸ்வரன், ஜனகன் - செந்தூரி, சயந்தன் - கிருத்திகா, நிறோசன் - சுஜித்திரா, சதுர்ஷா - தவக்குமார், டேறிக், அனுஜன், சஜித் ஆகியோரின் பேர்த்தியும், அனீஷ், அஷ்விகா, ஆருத், ஆதித், கிருஷ்ணா, ஷாத்விக், அருண், ஆதிஷ், அஷ்வத் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் இருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"துளசி"
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
021 223 0399
077 710 7275

(CS 57686) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 01 . 1951

மறைவு 07 . 03 . 2025

### சிவக்கொழுந்து சீதேவிப்பிள்ளை

விடத்தற்பளை, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சீதேவிப்பிள்ளை அவர்கள் நேற்று (07.03.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி-சின்னம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-வள்ளியம்மை தம்பதியின் பாசமிகு மருமகளும் சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மனைவியும் சிவசோதி (வானொலி அறிவிப்பாளர்-கனடா), சிவசொரூபன் (மாவட்ட இணைப்பாளர், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம்-கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயக்குமார் (விற்பனை முகவர்,Remax-கனடா), கஜந்தினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-பச்சிலைப்பள்ளி பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் (காலஞ்சென்ற) ஆறுமுகம், செல்லாச்சிப்பிள்ளை, (காலஞ்சென்ற) செல்லையா, கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவமலர், செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெசோ, ஜெனுஸ், கபிஷன், மிதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் விடத்தற்பளை, மிருசுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விடத்தற்பளை சம்பாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

விடத்தற்பளை,
மிருசுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 617 2083

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில்

மதிசுதாவின்
**வெந்து தனிந்தது காடு**

திரையிடலும் கலந்துரையாடலும்
இடம்: 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை
செல்வா மினி திரை அரங்கம்
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்
நேரம்: காலை 10.00 மணி

ஈழ சினிமா ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்

SCOPE giz
(CS 2687) V-1

## தேவை

யாழில் இயங்கும் சுப்பர்மார்க்கட்டுக்கு
காய்கறிகள், பழங்கள்
ஆகியவற்றினை விற்பனை
செய்யக்கூடிய நபர்கள் தேவை.

தொடர்பு:- 077 419 5209
(CS/57693) J-1

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி கல்வியங்காட்டில்
2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**(கிணற்றுடன்)** - tube well,
**நல்லூர் கோவில் 1.7** Km,
**கல்வியங்காடு சந்தி 350** m

077 185 4870
(cs. 57667) (N-1)

ஓம் சாய் ராம்

## காணி விற்பனைக்கு உண்டு

அச்சுவேலி மேற்கு கோணாவளையில் 31 பரப்பு காணி இரண்டு பரப்பாக (2) பிரித்து கொடுக்கப்படும் 20 அடி பாதையுடன் பிரித்து தரப்படும்

- வீடு அமைப்பதற்கு ஏற்ற இடம்
- நல்ல தண்ணீர் உண்டு
- சர்வதேச விமானநிலையத்தில் இருந்து 2km
  அச்சுவேலி சந்தியில் இருந்து 2km
- காப்பெற் பாதையும் உண்டு
- தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு:
077 676 3409, 077 594 6162
(CS 2686) V-1

## அரச மருத்துவமனைகளின்

# வெளிநோயாளர் பிரிவுகளை மேம்படுத்துவதற்குத் திட்டம்

கொழும்பு, மார்ச் 8

அரச மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவுகள் சீர் செய்யப்பட்டு, நோயாளர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும். நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருப்பதையும் தவிர்க்கவேண்டும். இவை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு, செலவுத் திட்டத்தின் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரச மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு வரும் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருக்கும் நிலை இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மக்கள் அரசாங்க மருத்துவமனைகளை நம்பி வருகின்றனர். ஆனால் கடந்தகாலங்களில் அரச மருத்துவமனைகளில் தரம் குறைந்த மருந்துகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இது மனித வர்க்கத்துக்கு எதிரான குற்றமாகும். மன்னிக்க முடியாததாகும். எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் பாதுகாத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

மூளைசாலிகளின் வெளியேற்றம் நாட்டில் ஆரோக்கியமான மருத்துவ சேவையை வழங்குதவற்குத் தடையாக இருக்கின்றது. நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்ததும், பொருளாதார நெருக்கடி நிலைமையும் மூளைசாலிகள் நாட்டிலிருந்து வெளியேறக் காரணங்களாகவிருந்தன.

சுகாதாரத்துறையில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவை செய்கின்றனர். நாட்டின் சுகாதாரத்துறையை முன்னேற்ற நிலைக்குக் கொண்டுவர நாங்கள் அனைவரும் முயற்சிக்க வேண்டும்- என்றார்.

(எ-இ)

## கேள்வி அறிவித்தலினை திருத்தம் செய்தல்
## சபை நிதி 2025 ( கட்டம் 1)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சார்பாக 07.03.2025 ந் திகதிய ( வியாழக் கிழமை) இப் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தலின் அட்டவணையில் இலக்கம் 01 இல் குறிப்பிட்ட வங்கியடி குறுக்கு வீதி புனரமைத்தல். இணுவில் கிழக்கு எனும் வேலை இரத்துச் செய்யப்படுவதுடன் அட்டவணை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41 (15)/02/05/ CF / 2025/03 | செட்டிவளவு வீதி புனரமைத்தல், இணுவில் மேற்கு | 2.67 | 60 | C8 or above (வீதிகள்) | 49 | 09.05.2025 | 27,000.00 | 06.06.2025 வரை |

தலைவர்
பிரதேச பெறுகைக்குழு.
வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

08.03.2025
(CR/44517) J-1

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## உப அலுவலகம், உடுவில்.

**வட்டாரம் -7 வாதுவினிப்பிள்ளையார் கோவில் வீதி, ஆதன இல புதியஇலக்கம்**

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-7 வாதுவினிப்பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள இவ்ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்படாது காணப்படுகின்றது.

மேற்படி ஆதனம் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்குப்பகுதி இணுவில் இறையில் அமைந்துள்ள விளக்குடையான் எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு. 1 குளி 2.94, நாகலிங்கம் குலநாயகம் என்பவரால் 26.05.2013ந் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் கீழ்வருமாறு வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனம் எனது காலம் சென்ற பிதா வேலுப்பிள்ளை நாகலிங்கத்தின் பிதாவழி முதுசமாக இருந்து ஒரே வழி உரித்தாளராகிய என்னை வந்தடைந்த பிதாவழி முதுசமும் சொந்தமும் நீண்டகால தங்குதடையற்ற ஆட்சியுடையதாகும் என்றும் குறித்த ஆதனம் பற்றிய விபரம் என்னிடம் தொலைந்துவிட்டபடியால் நாட்டு நிலவரம் காரணமாக காணிக்கந்தோரில் கண்டுபிடிக்க முடியாதபடியாலும் நானே இதன் சொந்தக்காரர் என்று இத்தால் உறுதி அளிக்கின்றேன் என்று குறித்த வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.இராசையா அவர்களால் 05.05.2013 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 1397 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பர 1 குளி 2.94 உம் அதற்குரியவைகளும் இதற்கெல்லைகளாக

கிழக்கு :- சீலன் பெண் காயத்திரி மற்றும் பரமசிவம் பெண் சந்திரபவானி ஆகியோரின் ஆதனங்களும்
வடக்கு:- அருணன் பெண் மயூரினியின் ஆதனம்
தெற்கு:- சிவசம்பு இராமநாதன். இராஜரத்தினம் பெண் பரமேஸ்வரி ஆகியோரின் ஆதனங்கள்
மேற்கு:- குகதாஸ். பெண் மாதினியினதும் நாகலிங்கம் குலநாயகத்தினதும் ஆதனங்கள்

தற்போது இவ்வாதனம் 01.06.2013இல் பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் 8410 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இரத்தினசிங்கம் அருணன் பெண் மயூரினிக்கு கொடுக்கப்பட்டுள்ளதால் இவர் இவ்வாதனத்தினை இரத்தினசிங்கம் அருணன் பெண் மயூரினி என்ற பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது இரத்தினசிங்கம் அருணன் பெண் மயூரினி எனும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்குபிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி சாரதா உருத்திரசாம்பவன், செயலாளர்**
**வலிகாமம் தெற்குபிரதேச சபை, சுன்னாகம்.**
2025.02.28

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 03 . 1955



மறைவு
04 . 03 . 2025

### திருமதி ஜெயகுமாரி வசந்தகுமார் (ராசாத்தி)

கண்டியை பிறப்பிடமாகவும் உரும்பிராய் மற்றும் கனடா (Toronto) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயகுமாரி வசந்தகுமார் அவர்கள் கடந்த 04.03.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓவசியர் நல்லதம்பி-புனிதவதி தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா-ஜானகி தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கலாநிதி வசந்தகுமார் அவர்களின் பாசமிகு மனைவியும் வைதேகி, சேரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாய்கிஷோர், சூஆன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆஹான், வேதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சாந்தகுமார் காலஞ்சென்ற புவனகுமார் (புத்தா) மற்றும் மோகனகுமார், சிவகுமார் வளர்ப்புச் சகோதரர்களான விஜயதுங்க காலஞ்சென்ற சாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (10.03.2025) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கனடாவில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள்
077 975 5795-மோகன்
077 881 2829-சிவா
++44 773 008 9183-மகள்

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
(CR 44518) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்ப்பாணம், இளவாலை திருமறைக் கலாமன்றங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மகளிர்தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இளவாலை திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலைக் களரியில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசியக் கல்வி நிறுவகத்தின் தமிழ்த்துறை ஓய்வு நிலை விரிவுரையாள ரும், எழுத்தாளருமான திருமதி ராணி சீதரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்த்துறைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கவிதா சந்திரகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள் ளார்கள்.

சிறப்புநிகழ்வாக யாழ். திருமறைக்கலாமன்றம் வழங்கும் ' செம்பாத்தாள்' கூத்துருவ நாடகமும் இடம்பெறவுள்ளது. (ச)

யாழ்ப்பாணம், மார்ச். 8
மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மகளிர்தினக் கொண்டாட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை யாழ்ப்பாணம் செல்வா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-41)

****

யாழ்ப்பாணம், மார்ச். 8
பெண்விடுதலைச் சிந்தனை அமைப்பு ஏற்பாடு செய்துள்ள சர்வதேச மகளிர்தின நிகழ்வு 'பொருளாதார நெருக்கடிகளும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும்' எனும் தொனிப்பொருளில் கொக்குவில் சந்தியிலுள்ள தேசியகலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணியளவில் இடம்பெறவுள்ளது. (ச-41-66)

****

யாழ்ப்பாணம், மார்ச். 8
கொக்குவில் மத்தி மேற்கு கிராம மட்ட அலுவலர்களின் ஏற்பாட்டில், சர்வதேச மகளிர் தின விழா கொக்குவில் மஞ்சனப்பதி முருகன் ஆலயத் திருமண மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைவாணி அகிலன், சிறப்பு விருந்தினராக அகில இலங்கை சமாதான நீதிவான் திருமதி சுலக்சனா ரஞ்ஜீவின் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

# சாவகச்சேரியில் மகளிர்தின நிகழ்வு



யாழ்ப்பாணம், மார்ச். 8
வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் சாவகச்சேரி நகர பொன்விழா மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன. வடக்கு மாகாணப் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வில் உள்ளூர் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் மருத்துவமனைகளால் விசேட மருத்துவமுகாமும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (ச-28)




# பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்

'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்' என்றார் கவிமணி தேசிகவிநாயம்பிள்ளை. பெண்களுக்கான முக்கியத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையில், உலகம் முழுவதும் கொண்டாடப்படும் தினங்களில் மகளிர் தினம் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும் என்றால் மிகையாகாது.

ஆரம்பத்தில் பெண் அடிமைத்தனம் என்ற ஒன்று இருந்ததில்லை. அது பெண்களுக்கான அனைத்து உரிமைகளையும் உடைய தாய்வழி சமூகமாகவே இருந்தது. மெல்ல, மெல்ல நிலவுடமை சமூக அமைப்பு உருவெடுத்தது. இதன் விளைவாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் வேலைப் பிரிவினை தோன்றியது. பெண்கள் வாரிசுகளுக்காகவும் குடும்ப அமைப்புக்காகவும் மட்டும் என்ற தோற்றம் உருவெடுத்தது. காலம் செல்லச்செல்ல பெண்கள் இந்தக் கூட்டுக்குள் இருந்து வெளியே வரத்துடித்தனர்.

கி.பி. 1789இல் பிரெஞ்சுப் புரச்சியின்போது பரிஸ் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். பெண்களுக்கும் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் பெறவேண்டும் என்றும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம், வாக்குரிமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. நாள்கள் செல்லச்செல்ல பெண்கள் மனதில் விழிப்புணர்வு ஏற்பட ஆரம்பித்தது.

**சர்வதேச மகளிர்தினம் இன்றாகும். அதைமுன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

### விதைபோட்ட நியூயோர்க்

18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நியூயோர்க்கில் ஆயிரக்கணக்கான பெண்கள் ரஷ்யா, இத்தாலி, போலந்து போன்ற நாடுகளிலிருந்து பணிக்காக குடிபெயர்ந்து வேலை செய்து வந்தனர். ஊதியத்தில் மட்டுமன்றி உரிமையிலும் அநீதி இழைக்கப்பட்டது. 1820ஆம் ஆண்டில் தையல் நிறுவனப் பெண்கள் இணைந்து முதல் வேலை நிறுத்தம் இடம்பெற்றது. இவற்றில் புகழ்பெற்றது மசாச்சூசெட்ஸில் உள்ள பருத்தி ஆலையில் நடைபெற்ற வேலை நிறுத்தம். வெறும் மூன்று டொலருக்கு 81 மணிநேர வேலை. அதிலும் ஒன்றேகால் பணத்தை விடுதிக்கும், உணவுக்கும் எடுத்துக் கொள்வார்கள். இந்தப் பின்னணியில்தான் உழைக்கும் பெண்கள் சங்கம் உருவானது. இப்படியாக சங்கங்கள் வளரத் தொடங்கின. 1908ஆம் ஆண்டில் குறைந்த வேலை நேரம், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் மற்றும் வாக்களிக்கும் உரிமை ஆகியவற்றைக் கோரி 15 ஆயிரம் பெண்கள் அணி திரண்டு நியூயோர்க் நகரை ஸ்தம்பிக்கச் செய்தனர். அப்போது படையினரால் கொடூரமாக பெண்கள் தாக்கப்பட்டனர். இவற்றை எல்லாம் தாங்கிக்கொண்ட பெண்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். அவர்கள் இலக்கு தெளிவாக இருந்தது. அதன் விதைகள் வேரூன்றப்பட்டன.




உழைக்கும் பெண்களைத் தாண்டி, நடுத்தர, மேல்தட்டு வர்க்கப் பெண்களும் போராட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டதன் மூலம் போராட்டம் வலுப்பெற்றது. பெண்களின் அடிப்படை உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் இயக்கமாக மட்டும் இயங்காமல் சமூகத்தில் நிலவும் அவலங்களுக்கும் சேர்த்தே போராடத் துணிந்தனர். பெண்களுக்கான நாளை சர்வதேச மயமாக்கவேண்டும் என்ற எண்ணம் கம்யூனிஸ்ட் ஆர்வலர் மற்றும் பெண்கள் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் கிளாராஜெட்சின் என்ற பெண்ணிடம் இருந்து வந்தது.

### தோற்றமும் வளர்ச்சியும்

1910ஆம் ஆண்டு டென்மார்க்கின் தலைநகரம் கோப்பன்ஹேகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மகாநாட்டில் அப்பெண்மணி தனது எண்ணத்தை பரிந்துரைத்தார். அங்கு 17 நாடுகளை சேர்ந்த 100 பெண்கள் இருந்தனர். அவர்கள் கிளாராஜெட்சினது ஆலோசனையை ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர். 1911ஆம் ஆண்டிலிருந்து ஆஸ்திரியா, டென்மார்க், ஜேர்மனி, மற்றும் சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் பல திகதிகளில் சர்வதேசமகளிர்தினம் கொண்டாடப்பட்டு வந்தது.

முதலாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது, 1917இல் ரஷ்யாவில் போர் வேண்டாம் 'அமைதியும் உணவும்தான் தேவை' என்று வலியுறுத்தி புரட்சிப் போராட்டத்தை தொடங்கும்வரை இந்தத் தினம் இந்த நாளில்தான் கொண்டாடப்பட வேண்டும் என்பது முறைப்படுத்தப்படவில்லை. சர்வதேச மகளிர் தினமாக மார்ச் எட்டாம் திகதியை ஆண்டு தோறும் கொண்டாடப்பட வேண்டும் என்று 1921ஆம் ஆண்டில் மொஸ்கோ நகரில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் பெண்கள் அகிலம் அமைப்பின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. அதிலிருந்து உலகம் முழுவதும் மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர்தினம் கொண்டாடப்படுகிறது.

பின்னர் 1975ஆம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐக்கியநாடுகள்சபை பிரகடனப்படுத்தியது. எட்டாம் திகதி பெண்களுக்கான சிறப்பு நாளாகும். சர்வதேசமகளிர் தினம் தொழிலாளர் இயக்கத்தில் இருந்து வளர்ந்து ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்டது சிறப்புக்குரியதாகும். சர்வாதிகார அரசுக்கு எதிராக தமது உரிமைகளை மீட்பதற்கான உழைக்கும் பெண்களின் புரட்சியை நினைவு கூர்வதற்காக உருவானதுதான் சர்வதேச உழைக்கும் மகளிர் நாள் என்பது இதன்மூலம் தெளிவாகிறது. உழைக்கும் பெண்களின் உரிமைகளை உறுதி செய்வதும் அனைத்துப் பணிகளிலும் அனைத்து நிலைகளிலும் பாலின சமத்துவத்தை உறுதி செய்வதும்தான் சர்வதேச மகளிர்தின கொண்டாட்டங்களுக்கு அர்த்தம் சேர்க்கும்.

சி.நந்தகுணலிங்கம்,
நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய நடவடிக்கைகளுக்காக 50 லட்சம் ரூபாவரை கடன் வசதி

## விவசாயக் குழுக் கூட்டத்தில் அரச வங்கிகளின் பிரதிநிதிகள் விளக்கம்

**யாழ்ப்பாணம், மார்ச் 8**

**விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக யாழ். மாவட்ட விவசாயகளுக்கு அதிகட்பச தொகையாக 50 லட்சம் ரூபாவரை நியமங்களின் அடிப்படையில் வழங்கக்கூடிய விசேட வாய்ப்புகள் உள்ளன என்று அரச வங்கிகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ். மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தி லேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். கூட்டத்தில் யாழ்.மாவட்ட பதில் செயலர் விவசாயிகளுக் குரிய கடன்வசதிகள் தொடர்பில் விளக்க மளிக்கக் கோரியபோது அவர்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

சொத்துக்கள் இருக்கும்போது 5 மில்லியன் ரூபாவரையில் விவசாயிகளுக்கு கடன் தொகை வழங்க வாய்ப்புள்ளது. சொத்துக்கள் இல்லாத விவசாயிகளுக்கு 3 மில்லியன் ரூபா வரையில் கடன் வழங்கும் வசதிகள் உள்ளன. ஆயினும் திட்டம் ஒன்றின் 25 வீத பங்களிப்பு விவசாயிகளினதும், 75 வீதப் பங்களிப்பு வங்கியால் கடனாகவும் வழங்கப்படும். பருவகாலக் கடன்கள் சிறுபோகம், பெரும்போகம் என்ற வகையில் உள்ளன. நெல் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைக்கு ஏற்ப கடன்தொகையின் அளவு வகுக்கப்படுகின்றது என்று அரச வங்கிகளின் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

விவசாயக் கிணறு சீரமைப்பு, இயந்திரச் சீரமைப்பு, கொள்வனவு என்பவற்றுக்கு கடன்வசதிகள் உள்ளனவா? என்றுமாகாண விவசாயப் பணிப்பாளர் கேட்டபோது, அவற்றுக்கும் கடன்வசதிகள் உள்ளன. ஆயினும் கடன்காலத் தவணைக்குள் விவசாயிகள் அவற்றை மீளச் செலுத்தவேண்டும் என்று அரச வங்கிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (எ-125)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

கிளிநொச்சி பளை, வேம்பொடு கேணியில் கிணற்றுக்குள் இருந்து பெண்ணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள் ளார். தவராசசிங்கம் சரஸ்வதி (வயது-54) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

துர்நாற்றம் வீசுவதை அவதானித்த பிரதேச வாசிகள் கிணற்றுக்குள் அவதானித்தபோது பெண்ணொருவர் சடலமாகக் காணப்பட்டுள் ளார். இதையடுத்து, பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு சடலம் மீட்கப்பட் டது. அந்தப் பெண் சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. (அ-ம-27-9)

## போதை

கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத் தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-110-18)

## வடக்கின்...

ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதல்நாள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றைய இரண்டாம் நாளில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. ரேமண்ட் அனுசாந்த் அதிகபட்சமாக 86 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சார்பில், ரஜித்குமார் நியூட்டன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், நாள் முடிவுக்கு வந்தது. ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும். (அ-ம-125)

சிவமயம்



## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் குரோதி வருடம் மாசி மாதம் 16ம் நாள் (28-02-2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர். கனகசபாபதி ஐயர் அன்னபூரணி அம்மா**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்கிரியைகள் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறும்.


| | | | |
|---|---|---|---|
| 09-03-2025 | மாசி 25 | ஞாயிற்றுக்கிழமை | தசாகம் காலை 10.00 மணி |
| 10-03-2025 | மாசி 26 | திங்கட்கிழமை | ஏகோதிஷ்டம், மாசியம் |
| 11-03-2025 | மாசி 27 | செவ்வாய்க்கிழமை | சபீண்டீகரணம் காலை |
| 12-03-2025 | மாசி 28 | புதன்கிழமை | கிருஹயக்ஞம் நண்பகல் 12.00 மணி |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலங்காவற் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 24.01.1946 இறப்பு 06.02.2025

அன்பின் இறைவா மண்ணில் இருந்து
விண்ணிற்கு அழைத்துக் கொண்ட உமது
அடியான் பிரான்சிஸ்பிள்ளை யேசுதாசன்
அவர்களுடைய பாவங்களை மன்னித்து
உமது விண்ணக வான் வீட்டில் நித்திய
இளைப்பாற்றியை அளித்தருளும்.

## அமரர் பிரான்சிஸ்பிள்ளை யேசுதாசன்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வார்:

எங்கள் அன்பு அப்பா!
நாம் எதிர்பாராத இழப்பொன்று நிகழ்ந்ததுவே
எங்கள் வீட்டின் சிரிப்பொலி உதிர்ந்ததுவே
இன்று முற்றுமாய் ஒய்ந்துள்ளது எம் வீடுகள்
உம் இழப்பை ஈடுசெய்ய முடியாது
உன் முகம் தேடி நாடி வரும் உம் பிள்ளைகளின்
அழுகுரலை நீ கேட்கவில்லையா?
நீர் பெற்ற செல்வங்கள் உம்மை ராஜாவாக
பார்க்க வேண்டும் என்ற ஆசையை உணரவில்லையா?
ஐயா நீர் செய்த நன்மைகளை நாம்
அறிந்தது உம் இறப்பில் தானே
மீண்டும் உம்மை காண மாட்டோமே
என்ற எம் ஏக்கம் தீரவில்லை அப்பா!
வேதனை போதும் என்று நினைத்து தான்
எம்மை விட்டு நெடுந்தூரம் சென்றாயோ!
சந்திப்போம் ஓர் நாள் நாம் பேரின்ப வீட்டில்



இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 08.03.2025 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும் அதனை தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

282, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
077 218 1701

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 பேர்...

களிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு எதிரான மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-213-56)

## புலிகளால்...

தின் பிரதான சூத்திரதாரி என்ற பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர். அவர், இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் வழங்கும் உளவாளியாகவும் செயற்பட்டுள்ளார் எனவும் தேரர் கூறினார்.

இது தொடர்பில் இணையத்தளம் ஒன்றுக்கு ஞானசாரதேரர் நேற்று வழங்கிய நேர்காணலின் ஒரு பகுதி வருமாறு:-

**கேள்வி:-** பிரதான சூத்திரதாரியை நீங்கள் உண்மையிலேயே அறிந்து வைத்துள்ளீர்களா?

**பதில்:-** எனக்கு தெரியும் என நான் நினைக்கின்றேன்.

**கேள்வி:-** பிரதான சூத்திரதாரியென ஒருவர் இருக்கின்றாரா?

**பதில்:-** ஆம்.

**கேள்வி:-** ஸஹ்ரானை பயிற்றுவித்தவரைத் தெரியுமா?

**பதில்:-** ஆம். தெரியும்.

**கேள்வி:-** ஸஹ்ரானை கொண்டுவந்தவரை தெரியுமா?

**பதில்:-** தெரியும்.

**கேள்வி:-** ஸஹ்ரானை வளர்த்துவிட்டவர் பற்றி தெரியுமா?

**பதில்:-** ஒருவர் அல்ல பலரைப் பற்றி தெரியும்.

**கேள்வி:-** பிரதான் சூத்திரதாரியை இன்று (நேற்று) வெளிப்படுத்துவதற்கு நீங்கள் தயாரா?

**பதில்:-** இந்த நபர்களைப் பற்றி பாதுகாப்பு தரப்புக்கும் தெரியும்.

**கேள்வி:-** நபரா, நபர்களா?

**பதில்:-** மூன்று, நான்கு நபர்கள் உள்ளனர்.

**கேள்வி:-** பிரதான சூத்திரதாரிகள் மூவரா, நால்வரா?

**பதில்:-** இவர்களில் ஒருவர் பிரதான சூத்திரதாரியென நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

**கேள்வி:-** தற்போது சிறையில் உள்ளவர்களா?

**பதில்:-** சிறை வைக்கப்பட்டு, குற்றமற்றவர்களென விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**கேள்வி:-** நால்வரும் வெளியிலா உள்ளனர்?

**பதில்:-** ஆம்.

**கேள்வி:-** நால்வரும் தமிழரா, முஸ்லிமா, சிங்களவர்களா?

**பதில்:-** நால்வரும் முஸ்லிம்கள்.

**கேள்வி:-** இவர்களில் அரசியல்வாதிகள் உள்ளனரா?

**பதில்:-** அரசியல் பாதுகாப்பு கிடைத்திருக்கக்கூடும்.

**கேள்வி:-** இந்த நால்வருள் அரசியல்வாதிகள் உள்ளனரா?

**பதில்:-** அதை நான் பிறகு சொல்கின்றேன்.

**கேள்வி:-** இவர்கள் எந்தப் பகுதியை சேர்ந்தவர்கள்?

**பதில்:-** எல்லா விடயங்களையும் என்னால் கூறமுடியும். எனினும், தற்போது சுதந்திரமாக உள்ளவர்கள் நாட்டைவிட்டுத் தப்பிச்செல்லக்கூடும்.

பிரதான சூத்திரதாரியென கருதப்படும் நபர் 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்தார். அவர் தொடர்பில் புலிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அரச படைகளுக்கு தகவல் வழங்கும் உளவாளி இவரென சந்தேகித்தனர். இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து அவரைப் புலிகள் விரட்டினார்கள். இவர் இராணுவ புலனாய்வு பிரிவுக்கு தகவல் வழங்கும் நபராகச் செயல்பட்டுள்ளார். அவர்தான் சஹ்ரானை பயிற்றுவித்தார். துரதிஷ்டவசமாக அவர் இன்று வெளியில் உள்ளார் - என்றார். (அ-ம-44)

## வடக்கை...

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹெந்துன்நெத்தி தலைமையிலான குழுவினர் நேற்று வடமாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு, தொழிற்சாலைகள், தொழிற்பயிற்சி மையங்கள், உற்பத்தித் தளங்கள் ஆகிய இடங்களுக்குக் களப் பயணம் மேற்கொண்டனர். இதன் போதே, அமைச்சர் சுனில் ஹெந்துன்நெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - ஆனையிறவு உப்பு உற்பத்தித்தளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஆகியவற்றுக்கும், இன்றும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளுக்கும் அமைச்சர்கள் சென்றனர். இதன்போது, அவர்கள் பொதுமக்கள், பணியாளர்கள் ஆகியோரைச் சந்தித்து நீண்ட கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

ஆனையிறவு உப்பு உற்பத்தித்தளம் அடுத்த மாதம்முதல் நவீன இயந்திரங்களின் உதவியுடன் இயக்கப்படவுள்ள நிலையில், அதுதொடர்பான ஆய்வுகளையும் அமைச்சர்கள் மேற்கொண்டனர். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீளவும் இயக்குவதற்கு தேவைப்படும் நிதி, வளங்கள், ஆளணிகள் மற்றும் இதர விடயங்கள் தொடர்பிலும் அமைச்சர்கள் குழு கவனத்தைச் செலுத்தியுள்ளது.

அதேபோன்று காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை மீளவும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. சிமெந்துத் தொழிற்சாலையாக மீண்டும் இயங்கவைப்பதா? அல்லது மக்களுக்குப் பயனுள்ளவகையில் வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதா? என்பது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹெந்துன்நெத்தியுடன், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரியப்பெரும, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், க.இளங்குமரன், எஸ்.சிறிபவானந்தராஜா ஆகியோரும் இந்தக் களப் பயணங்களில் கலந்துகொண்டனர். (அ-ம-26-113)

## தேசியப்...

என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

ஆட்சிப் பொறுப்பைக் கையேற்று, மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் மக்களின் அதிருப்தியைச் சம்பாதித் அரசாங்கமாகவே தற்போதைய அரசாங்கம் காணப்படுகின்றது. ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் பொய் கூறியே ஆட்சியைக் கைப்பற்றினர். மக்களும் விரைவான பிரதிபலனை எதிர்பார்த்தனர். அது நடக்கவில்லை என்பதால் மக்கள் அதிருப்தியில் உள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தினர் தேசியப் பாதுகாப்பைப் பூச்சியத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் அவமரியாதைக்கு உட்படுத்தப்படுகின்றனர் - என்றார். (அ-ம-44)

## மேலாய்வுப்...

டுள்ளது. காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி தற்பரன் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று (நேற்று) இடம்பெற்றது. இதன்போது, புதைகுழி விவகாரம் தொடர்பில் மேலாய்வுகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகையாக 19.8 மில்லியன் ரூபா தேவை எனக் குறிப்பிட்டு காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தின் மூலம் நீதிவானிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதையடுத்தே, குறித்த நிதியை நீதியமைச்சிடம் கோருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-125)

## குடும்பப்பெண்...

மடுப்பகுதியில் வசிக்கும் குடும்பப் பெண் ஒருவரே, அயல்வீட்டு நபரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அதை வீடியோவாகவும் பதிவுசெய்ததுடன், அந்த வீடியோவை வெளியிடுவேன் என்றுமிரட்டி அந்தக்குடும்பப்பெண்ணை மீண்டும் மீண்டும் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதனால் கர்ப்பமான குறித்த பெண் குழந்தை ஒன்றையும் பிரசவித்துள்ளார்.

இதனையடுத்து பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தில் 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அந்தப் பெண் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேகநபர் தலைமறைவான நிலையிலேயே, பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய அவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-18)

## பொன்...

பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது.

முதல்நாளில் வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், ஆட்டத்தின் இரண்டாம் நாள் நேற்று ஆரம்பமானது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்று, 14 ஓட்டங்களால் முன்னிலையானது.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நாள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும். (அ-ம-125)

## மாவீரர்...

நினைவுகூர்வார்கள். ஆனால், இன்றும் கூட பல துயிலுமில்லங்கள் மக்கள் சென்றடையமுடியாத நிலையில்தான் உள்ளன. முள்ளியவளை, அளம்பில், தேராவில், ஈச்சங்குளம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கிலுள்ள ஏராளமான துயிலுமில்லங்களும் இராணுவத்தின் பிடியில் உள்ளன. அவற்றை உடனடியாக விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

மாவீரர்களுடைய உறவுகளும், தமிழ் மக்களும் மாவீரர்களை விதைத்த இடத்தில் கண்ணீர் சிந்தி நினைவுகூருவதற்காக, வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் கையகப்படுத்தலில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த அரசாங்கத்திடம் எதிர்பார்க்கின்றனர் - என்றார். (அ-ம-26)

## பணம்...

அமரசூரிய தெரிவித்துள்ளார். நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று பாடசாலைகளுக்கு இடையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. அந்த ஏற்றத்தாழ்வைக் குறைக்கவும், புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவும் நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். ஒவ்வொரு பாடசாலையையும் பௌதீக ரீதியாக ஆய்வு செய்து, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்யவும், தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள நிர்மாணப் பணிகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கவும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் மாணவர்களிமிருந்து பணம் அறிவிடுதல் பாரதூரமான குற்றமாகும். அவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்தால் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-26)

## குடும்பத்...

நில அளவைத் திணைக்களத்தில் பணிபுரிந்து கடந்த மாதம் ஓய்வுபெற்ற சி.மகேந்திரராஜா (வயது -60) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். வீட்டில் உள்ள அவரது மனைவி ஆசிரியராக பணிபுரிவதால் பாடசாலைக்கு சென்ற நிலையில், குறித்த நபர் மட்டும் வீட்டில் தனித்து நின்றுள்ளார்.

பாடசாலை முடிந்து மனைவி வந்து பிற்பகல் 1.45 மணியளவில் வீட்டில் உள்ள கணவரை அழைத்த போதும் நீண்ட நேரமாக வீட்டுவாசல் திறக்கப்படவில்லை. இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் மதிலால் ஏறிச்சென்று கதவைத் திறந்தபோது மேற்படி நபர் அறையொன்றுக்குள் இறந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

கட்டிலில் ஏறி, வீட்டுக்கு வர்ணம்பூசிய போது கட்டில் உடைந்து அவர் விழுந்திருக்கலாம் என்றும், இதனால் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிற்பகல் 2 மணியளவில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியபோதிலும் மாலை 5 மணியளவிலேயே அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். அதுவரை சடலம் அந்த இடத்தைவிட்டு அப்புறப்படுத்தப்படாமல் இருந்துள்ளது. (அ-ம-110-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கீடு ஏன்?

## அம்பிகா சற்குணநாதன் கேள்வி

கொழும்பு, மார்ச் 8

இலங்கையின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு கடந்த ஆண்டை விடவும் 3 சதவீதம் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் விசனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு 437 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அரச கட்டமைப்புகளில் நிதி சார் விடயங்கள் உரியவாறு மேற்பார்வைக்கு உட்படுத்தப்படாததும், அநாவசிய விரயங்கள் உயர்வான மட்டத்தில் காணப்படுவதும், ஊழல் இடம்பெறுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதுமான கட்டமைப்பே இராணுவமாகும்.

2023 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில், இராணுவத்தின் வசமிருந்த சுமார் 4 ஆயிரத்து 439 ஏக்கர் காணி தொடர்பான விவரங்கள் அவர்களது நிதியறிக்கையில் வெளியிடப்படவில்லை. அவற்றில் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளும் உள்ளடங்கியிருக்கக்கூடும். அதேபோன்று அரச வளங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்கள் ஊடாக ஈட்டப்பட்ட 170.16 மில்லியன் ரூபா வருமானம் பற்றிய விவரங்களும் நிதியறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

நிதியறிக்கையில் செலவினங்களைக் குறைத்துக் காண்பிப்பது பொதுவானதெனினும், மேற்குறிப்பிட்ட இராணுவத்தின் நிதியறிக்கை யில் சொத்துக்களின் பெறுமதி உயர்வாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி 11 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டிருக்கும் 8.15 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனப் பழுதுபார்ப்பு மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் கொள்வனவு தொடர்பில் விநியோகஸ்த்தர்களுடன் ஒப்பந்தங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. அத்தோடு 8.82 மில்லியன் ரூபா பெறுமதியான 123 வைப்புக்கள் அரசாங்க வருமானத்துடன் சேர்க்கப்படவில்லை.

இவை இராணுவச் செலவினங்கள் தொடர்பில் பல்வேறு கேள்விகளைத் தோற்றுவித்துள்ளன. ஆனால் இந்த வெளிப்படுத்தல்களுக்கு மத்தியிலும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரைகள் இராணுவத்தால் புறந்தள்ளப்பட்டுள்ளமை, இராணுவச் செயற்பாடுகளில் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கைக் காண்பிக்கிறது - என்றார். (எ-இ)

### யாழ்.மாவட்டத்தில்

# பன்றிப்பண்ணைகள் பதிவு புதிய நடைமுறை அறிமுகம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பன்றி வளர்ப்புப் பண்ணைகளைப் பதிவு செய்வது தொடர்பில் புதிய முறைமை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவசாயக் குழுக்கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வளர்ப்புப் பன்றிகளால் பயிர்ச்செய்கைளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது என்றும் பன்றிப்பண்ணைகள் மூலம் ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் நோய் தொற்று பரவிவருவதாகவும் சுட்டிக்காட்டப் பட்டது. இதுகுறித்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பப்பட்டபோது, எம்மிடம் பதிவுக்கு வரும் பண்ணையாளர்களுக்கு பதிவு வழங்கப்படும். தொடர்ந்து பதிவை மேற்கொள்ள பிரதேச சபை மற்றும் சுகாதார அதிகாரி பணிமனைக்குச் சென்று நடவடிக்கைகளை எடுப்பார்கள் எனத் தெரிவித்தார். இதுதொடர்பில் யாழ். மாவட்ட செயலர் தெரிவிக்கையில்,

இனிவரும் காலங்களில் பன்றிகளால் பிறருக்குத் தொல்லை ஏற்படுதல், நோய்த் தொற்றுகளை தவிர்த்தல் உள்ளிட்ட அசௌகரியங்களைத் தவிர்த்து கொள்ளும் முகமாக பிரதேசசபை , சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை உட்பட சம்பந்தப்பட்ட ஏனைய சுகாதார சுற்றாடல் திணைக்களத்தின் அனுமதியின் பின்னரே யாழ்.மாவட்டத்தில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் அனுமதி வழங்கவேண்டும் அத்துடன் ஒரு வருடத்துக்கொருமுறை அந்தப் பதிவை புதுப்பிக்கும் செயன்முறை தொடர்ந்து பேணப்படவேண்டும் எனத் தெரிவித்தார். அதற்கமைய இந்த நடைமுறைகள் மாவட்ட விவசாயக் குழுவில் தீர்மான மாக நிறைவேற்றப்பட்டன. (ச-125)

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு


பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57653) J-1

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump) இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)



"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் யாழ்நகர் பகுதி வெலிங்டன் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி செல்லும் பே.பொன்னம்பலம் பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரம் சகல ஆவணங்களுடன் இரண்டு பரப்பு மூன்று குளி காணி விற்பனைக்கு வீடுகள் அமைப்பதற்கு ஏற்ற இடம்

- ஆஸ்பத்திரி 100 மீற்றர்
- கீல்ஸ் புட்சிற்றி 50 மீற்றர்
- ஸ்ரான்லி றோட் வெலிங்டன் சந்தி 50 மீற்றர்
  யாழ் பஸ்நிலையம் 200 மீற்றர்

தரகர் தேவையில்லை

தொடர்பு: 076 755 8606 - Whatsapp
077 638 5683

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 09 . 1946



இறப்பு 06 . 03 . 2025

## இராஜரத்தினம் தெய்வநாயகி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் ஓமந்தை, வவுனியா, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரத்தினம் தெய்வநாயகி நேற்றுமுன்தினம் (06.03.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Dr. இராஜரத்தினம் (பதிவு வைத்திய அதிகாரி ஓமந்தை - வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சச்சிதானந்தன், சரவணபவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், முகுந்தன், ரமணன், கோபிகா, பாலஹரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இளங்கோவன், ஜெயராணி, மைத்ரேயி, சுபோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆதித்தியா, இனியா, ஆதர்ஷியா, இராதெனி, ஹேஷவி, ஹாருணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2025) காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.51 /5, இலந்தையடி ஒழுங்கை
உடுவில் மேற்கு, உடுவில்.
(தொலைபேசி - 077 632 8065)

தகவல்:
குடும்பத்தினர்.

CS 576891 N-1

## காணி விற்பனைக்கு

கோணாக்கம்பியன்புலம் கைதடி மானிப்பாய் வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 636 7354

(CS/57673) J-1

## விலை குறைப்பு

PPT நிறுவனத்தின் அதிசொகுசு பேருந்தின் பயணச்சீட்டானது இன்று முதல் 2800 இல் இருந்து 2500 ஆக குறைக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

0764408947,0775731318



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08 .03. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org